# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**

**ஆணை எண்: 258 /பேரூ/2022**
**நாள் : 23.01.2023**

திரு. மா. முத்துராஜா,
திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
திருப்பத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி,
சிவகங்கை மாவட்டம். – எதிர் மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர், காளியம்மன் கோவில் தெருவில் வசிக்கும் திரு. மா. முத்துராஜா என்பவரது 16.10.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.12.2022 அன்று பெறப்பட்டு 258/பேரூ/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர், காளியம்மன் கோவில் தெருவில் வசிக்கும் திரு. மா. முத்துராஜா, தனது 16.10.2022 புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் பேரூராட்சியில் கடந்த 2020 -2021ஆம் ஆண்டில் சூரிய சக்தியுடன் இயங்கும் தெரு விளக்குகள் அமைப்பதற்கு ரூ.67,14,000/- (ரூபாய் அறுபத்து ஏழு இலட்சத்து பதினான்காயிரம்) தொகை செலவிடப்பட்டது என்று 07.04.2021ஆம் தேதியன்று திருப்பத்தூர் பேரூராட்சியின் செயல் அலுவலர் எனது RTI மனுவின் கேள்விக்கு தகவல் தந்துள்ளார்.

மேற்படி பேரூராட்சி செயல் அலுவலர் 10.02.2021 ஆம் தேதியன்று அளித்துள்ள தகவலில் சூரிய சக்தியிடன் இயங்கும் தெரு விளக்குகள், அறுபது வாட்ஸ் விளக்குகள் பதினெட்டு அமைப்பதற்கு ஒரு விளக்கின் விலை GST உள்பட ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்து எட்டாயிரம் என்றும், முப்பது வாட்ஸ் விளக்குகள் பதினைந்தும் ஒரு விளக்கின் விலை GST உள்பட ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்து எட்டாயிரம் என்றும் தகவல் தந்துள்ளார்.

மேற்படி விபரப்படி அறுபது வாட்ஸ் விளக்குகள் பதினெட்டு ஒரு விளக்கின் விலை ரூ.1,48,000/- வீதம் பதினெட்டு விளக்குகளுக்கு ரூ.26,64,000/- (ரூபாய் இருபத்து ஆறு இலட்சத்து அறுபத்து நான்காயிரம்) வருகிறது.

மேற்படி விபரப்படி முப்பது வாட்ஸ் விளக்குகள் பதினைந்து ஒரு விளக்கின் விலை ரூ.1,38,000/- விதம் பதினைந்து விளக்குகளுக்கு ரூ.20,70,000/- (ரூபாய் இருபது இலட்சத்து எழுபது ஆயிரம்) வருகிறது. ஆகமொத்தம் முப்பது மூன்று விளக்குகளுக்கும் ரூ.47,34,000/- (ரூபாய் நாற்பத்து ஏழு இலட்சத்து முப்பத்து நான்காயிரம்) வருகிறது.

திருப்பத்தூர் பேரூராட்சியில் 07.04.2021ஆம் தேதியன்று தந்துள்ள தகவலில் சூரிய சக்தியுடன் இயங்கும் தெரு விளக்குகள் அமைப்பதற்கு ரூ.67,14,000/- (ரூபாய் அறுபத்து ஏழு இலட்சத்து பதினான்காயிரம்) தொகை செலவிடப்பட்டது என்று தகவல் தந்துள்ளார்.

அதில் மொத்த விளக்குகள் முப்பத்து மூன்று, இவற்றுக்கு செலவிடப்பட்ட தொகை ரூ.47,34,000/- (ரூபாய் நாற்பத்து ஏழு இலட்சத்து முப்பத்து நான்காயிரம்). இதில் மேற்படி ரூ.67,14,000/-ல் ரூ.47,34,000/- தொகை செலவு செய்தது போக மீதமுள்ள ரூ.19,80,000/-க்கு முறையான கணக்குகள் இல்லை.

இந்நிலையில் பேரூராட்சி செயல் அலுவலர் 09.09.2021–ஆம் தேதியன்று கொடுத்துள்ள தகவலில் பத்தொன்பது இலட்சத்து எண்பதாயிரம் செலவில் உயர் கோபுர மின் விளக்குகள் அமைந்துள்ளதாக தகவல் தந்துள்ளார்.

சூரிய சக்தியுடன் இயங்கும் தெரு விளக்குகள் அமைப்பதற்கு ரூ.67,14,000/- தொகை செலவிடப்பட்டது என்று தகவல் தந்துவிட்டு முன்னுக்குப் பின் முரணான தகவலை தந்துள்ளார்கள்.

மேலும் கடந்த 2020-2021ஆம் ஆண்டு சூரிய சக்தியுடன் இயங்கும் தெரு விளக்குகள் அமைத்ததிலும் மேற்படி ஆண்டில் கொரானா நோய் தொற்று காலத்தின் போது கிருமி நாசினி வாங்கியது தொடர்பாக உள்ள அனைத்து வரவு செலவு கணக்குகளின் ஆவண தகவல்களையும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் வாங்கிப்பார்த்தபோது அதில் முன்னுக்குப்பின் முரணான தகவல்களை தந்துள்ளார்கள். மேற்படி ஆவணங்களின் தகவல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

<u>முறைகேடுகள் நடந்திருப்பதாக சந்தேகம் வரக்காரணங்கள்:–</u>

1. சூரிய சக்தியுடன் இயங்கும் தெரு விளக்குகள் அமைப்பதற்கு ரூ.67,14,000/- தொகை செலவிடப்பட்டது என்று தகவல் தந்துள்ளார்கள்.
2. சூரிய சக்தியுடன் இயங்கும் தெரு விளக்குகள் அறுபது வாட்ஸ் விளக்குகள் பதினெட்டு வாங்கியதற்கு பில் இன்வாய்ஸ் தந்துள்ளார்கள். மேலும் சூரிய சக்தியுடன் இயங்கும் தெரு விளக்குகள் முப்பது வாட்ஸ் விளக்குகள் முப்பது வாங்கியதற்கும் பில் இன்வாய்ஸ் தந்துள்ளார்கள்.
3. ஆனால் ரூ.19,80,000/-க்கு முறையான கணக்குகள் பில் இன்வாய்ஸ் இல்லை.
4. மூன்று உயர் கோபுர மின்விளக்கு ரூ.19,80,000/-அமைத்துள்ளதாக தகவல் தந்துள்ளார். ஆனால் இதற்கான பில் இன்வாய்ஸ் தரவில்லை.
5. 2020-2021 ஆண்டு கொரானா நோய் தொற்றுன்போது கிருமி நாசினி வாங்குவதற்கு ரூ.5,66,888/- தொகை செலவிடப்பட்டது என்று தகவல் தந்துள்ளார். ஆனால்

முறையான பில் இன்வாய்ஸ் கொடுக்காமல் முன்னுக்குப்பின் முரணான தகவலை தந்துள்ளார்கள்.

மேற்படி தகவல்களை வைத்து பார்க்கும்போது முறைகேடுகள் நடந்து இருப்பதாகவே தெரியவருகிறது.

எனவே, சமூகம் அவர்கள் விசாரணை செய்து முறைகேடுகள் செய்த நபர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி திருப்பத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 21.12.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

திரு. மா. முத்துராஜா என்பவரின் முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள புகார்களுக்கு செயல் அலுவலரின் 3.1.2023 நாளிட்ட அறிக்கையினை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:-

1) **சூரிய சக்தியுடன் இயங்கும் தெரு விளக்குகள் அமைப்பதற்கு ரூ.67,14,000/– தொகை செலவிடப்பட்டது என்று தகவல் தந்துள்ளார்கள்.**

   திருப்பத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியைச் சேர்ந்த, திரு. மா. முத்துராஜா என்பவர் பல்வேறு தேதிகளில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் கோரிய பல்வேறு தகவல்களுக்கு உரிய காலக்கெடுவிற்குள்ளும், சட்ட விதிகளுக்குட்பட்டும் ஏற்கனவே தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளது.

2) **சூரிய சக்தியுடன் இயங்கும் தெரு விளக்குகள் அறுபது வாட்ஸ் விளக்குகள் பதினெட்டு வாங்கியதற்கு பில் இன்வாய்ஸ் தந்துள்ளார்கள். மேலும் சூரிய சக்தியுடன் இயங்கும் தெரு விளக்குகள் முப்பது வாட்ஸ் விளக்குகள் முப்பது வாங்கியதற்கும் பில் இன்வாய்ஸ் தந்துள்ளார்கள்.**

   திருப்பத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியைச் சேர்ந்த, திரு. மா. முத்துராஜா என்பவர் பல்வேறு தேதிகளில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் கோரிய பல்வேறு தகவல்களுக்கு உரிய காலக்கெடுவிற்குள்ளும், சட்ட விதிகளுக்குட்பட்டும் ஏற்கனவே தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளது.

3) **ஆனால் ரூ.19,80,000/–க்கு முறையான கணக்குகள் பில் இன்வாய்ஸ் இல்லை.**

   திருப்பத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியைச் சேர்ந்த, திரு. மா. முத்துராஜா என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் கோரியுள்ள பல்வேறு கோரிக்கைகள் தெளிவாக இல்லாத காரணத்தாலும், புகார் வடிவில் உள்ளதாலும் தகவல்கள் வழங்குவதில் சிரமமான சூழ்நிலை ஏற்பட்டது. இருப்பினும் மனுதாரர் கோரிய தகவல்களை இயன்ற அளவு யூகித்து பதில்கள் அனுப்பப்பட்டுள்ளது.

   திருப்பத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியில் ஒவ்வொரு மாதமும் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் அடுத்த மாத பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு அதற்கான பட்டியல்கள் உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இதன் காரணமாக இது போன்று தேவைப்படும் தகவல்களுக்கு பேரூராட்சி அலுவலக

ஆவணங்களையும் மற்றும் உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு அனுப்பப்பட்ட ஆவணங்களைப் பெற்று அவற்றையும் பரிசீலித்து தகவல்கள் தெரிவிக்கப்பட வேண்டிய சிரமமான சூழ்நிலை உள்ளது.

இப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள ரூ.19,80,000-க்கு மூன்று உயர்கோபுர சோலார் மின்விளக்குகள் உரிய ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளின் கீழ் கொள்முதல் செய்யப்பட்டு அதற்கான செலவின பட்டியல் தொகை சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் ஆணையின்படியே விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித முறைகேடுகளும் இல்லை என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

4) **மூன்று உயர் கோபுர மின்விளக்கு ரூ.19,80,000/– அமைத்துள்ளதாக தகவல் தந்துள்ளார்கள். ஆனால் இதற்கான பில் இன்வாய்ஸ் தரவில்லை.**

திருப்பத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியைச் சேர்ந்த, திரு. மா. முத்துராஜா என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் கோரியுள்ள பல்வேறு கோரிக்கைகள் தெளிவாக இல்லாத காரணத்தாலும் புகார் வடிவில் உள்ளதாலும் தகவல்கள் வழங்குவதில் சிரமமான சூழ்நிலை ஏற்பட்டது. இருப்பினும் மனுதாரர் கோரிய தகவல்களை இயன்ற அளவு யூகித்து பதில்கள் அனுப்பப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியில் ஒவ்வொரு மாதமும் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் அடுத்த மாத பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு அதற்கான பட்டியல்கள் உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இதன் காரணமாக இதுபோன்று தேவைப்படும் தகவல்களுக்கு பேரூராட்சி அலுவலக ஆவணங்களையும் மற்றும் உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு அனுப்பப்பட்ட ஆவணங்களைப் பெற்று அவற்றையும் பரிசீலித்து தகவல்கள் தெரிவிக்கப்பட வேண்டிய சிரமமான சூழ்நிலை உள்ளது.

இப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள ரூ.19,80,000/-க்கு மூன்று உயர்கோபுர சோலார் மின்விளக்குகள் உரிய ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளின் கீழ் கொள்முதல் செய்யப்பட்டு அதற்கான செலவின பட்டியல் தொகை சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் ஆணையின்படியே விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித முறைகேடுகளும் இல்லை என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5) **2020–2021ம் ஆண்டு கொரானா நோய் தொற்றின் போது கிருமி நாசினி வாங்குவதற்கு ரூ.5,66,888/– தொகை செலவிடப்பட்டது என்று தகவல் தந்துள்ளார்கள். ஆனால் முறையான பில் இன்வாய்ஸ் கொடுக்காமல் முன்னுக்குப்பின் முரணான தகவலை தந்துள்ளார்கள். மேற்படி தகவல்களை வைத்து பார்க்கும்போது முறைகேடுகள் நடந்து இருப்பதாகவே தெரிய வருகிறது.**

திருப்பத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியைச் சேர்ந்த, திரு. மா. முத்துராஜா என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் கோரியுள்ள பல்வேறு கோரிக்கைகள் தெளிவாக இல்லாத காரணத்தாலும் புகார் வடிவில் உள்ளதாலும் தகவல் வழங்குவதில் சிரமமான சூழ்நிலை ஏற்பட்டது. இருப்பினும் மனுதாரர் கோரிய தகவல்களை இயன்ற அளவு யூகித்து பதில்கள் அனுப்பப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியில் ஒவ்வொரு மாதமும் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் அடுத்த மாத பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு அதற்கான பட்டியல்கள் உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

திருப்பத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியில் ஓம் முருகா டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தின் மூலம் நீம் ஆயில் என்ற கொரானா கிருமி நாசினி ரூ.1,53,164/- என்ற விலை விகிதத்தில் மூன்று முறை உரிய ஒப்பந்தபுள்ளி நடவடிக்கைகளின் கீழ் கொள்முதல் செய்யப்பட்டு அதற்கான செலவின பட்டியல் தொகை சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் ஆணையின்படியே விடுவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வி.ஜே. டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தின் மூலம் பொது சுகாதார கிருமிநாசினிகள், கொசு மற்றும் தண்ணீரால் பரவக்கூடிய நோய்களை தடுக்கும் கிருமிநாசினிகள், பிளிச்சீங் பவுடர், நீர்த்த மற்றும் அடர் சுண்ணாம்புத் தூள், லிக்யூட், குளோரின், பினாயில், முககவசம், கைஉறைகள் மற்றும் லைசால் போன்ற கிருமி நாசினிகள் ரூ.5,00,624/- மற்றும் 5,25,670/-க்கு உரிய ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளின் கீழ் கொள்முதல் செய்யப்பட்டு அதற்கான செலவின பட்டியல் தொகை சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் ஆணையின்படியே விடுவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மேற்படி இனங்களில் கொரானா வைரஸ் கிருமிநாசினிகள் கொள்முதல் செய்யப்பட்ட விவரம் மட்டும் மனுதாரரால் கோரப்பட்டதால் அவ்விவரத்தை மட்டும் தனியே பிரித்து தகவல் அளிக்க சிரமமான சூழ்நிலை ஏற்பட்டது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இருப்பினும் மனுதாரர் கோரிய தவல்களை இயன்ற அளவு யூகித்து பதில்கள் அனுப்பப்பட்டுள்ளது. இவற்றில் எவ்வித முறைகேடுகளும் இல்லை என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் நாகர்கோவில் முகாமில் 03.01.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.12.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**03.01.2023 அன்று மனுதாரர் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

"சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் பேரூராட்சியில் கடந்த 2020–2021ஆம் ஆண்டு சூரிய சக்தியுடன் இயங்கும் தெரு விளக்குகள் அமைத்ததில் பேரூராட்சி அலுவலர்களால் பெரும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளன. அதே போன்று கொரோனா பெருந்தொற்று காலத்தின்போது திருப்பத்தூர் பேரூராட்சியால் கிருமிநாசினி வாங்கி பயன்படுத்தியதிலும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளன.

திருப்பத்தூர் நகராட்சியிலிருந்து எனக்கு அளிக்கப்பட்ட தகவலில் சூரிய சக்தியுடன் இயங்கும் தெரு விளக்குகள் அமைப்பதற்கு ரூபாய் 67.14 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளனர். ஆனால் முறையான கணக்குகளை எனக்கு தெரிவிக்காமல் முன்னுக்கு பின் முரணாக தகவல் அளித்துள்ளனர். அதே போன்று 3 உயர் மின் கோபுர விளக்குகள் ரூபாய் 19.80 இலட்சம் செலவு செய்து அமைத்துள்ளதாக தெரிவித்துள்ள பேரூராட்சியினர் அதற்கும் முறையாக கணக்கு காட்டவில்லை. மேலும் கொரானா காலத்தில் கிருமி நாசினி

வாங்கியதற்காக ரூபாய் 5,66,888/– செலவு செய்ததிலும் முன்னுக்கு பின் முரணாக எனக்கு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் அளித்துள்ளனர்.

எனவே திருப்பத்தூர் பேரூராட்சியில் சூரிய ஒளியில் இயங்கும் தெருவிளக்குகளை அமைப்பதிலும், உயர் கோபுர மின் விளக்குகள் அமைப்பதிலும் மற்றும் கொரானா காலத்தில் கிருமி நாசினிகள் வாங்கியதில் முறைகேடுகள் ஆகியவற்றை விசாரித்து, சம்பந்தப்பட்ட பேரூராட்சி அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 16.10.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**03.01.2023 அன்று திருப்பத்தூர் பேரூராட்சியின் செயல் அலுவலர் இம்முறை மன்றத்தின் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

"மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள சூரிய சக்தியில் இயங்கும் தெரு விளக்குகள் திருப்பத்துார் பேரூராட்சியில் அமைப்பதற்கு அப்பணியை 3 விதமாக பிரிக்கப்பட்டு, அதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டன. மேலும் ரூபாய் 19,80,000/– மதிப்பீட்டில் 3 உயர் கோபுர சோலார் மின் விளக்குகள் அமைத்திட ஒப்பந்தப் புள்ளிகளின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு அதற்கான செலவின பட்டியல் தொகை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆணையின்படி விடுவிக்கப்பட்டது.

மேற்கண்ட ஒப்பந்தப் புள்ளிகள் Tamil Nadu Transparency in Tenders Act, 2000-ன் குறிப்பிட்டுள்ளவாறு இவ்வொப்பந்தப் புள்ளிகள் தொடர்பாக தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்படவில்லை. மேலும் இணையதளம் மூலமாக E Tender-ம் கோரப்படவில்லை. உள்ளூர் ஒப்பந்ததாரர்களுக்கு தெரிவித்தும், உள்ளூரில் விளம்பரம் செய்தும் மேற்கண்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டன என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் 2020–21 கொரானா பெருந்தொற்று காலத்தில் கிருமி நாசினி உரிய ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளின் கீழ் கொள்முதல் செய்யப்பட்டு அதற்கான செலவினப் பட்டியல் தொகை பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆணையின்படி விடுவிக்கப்பட்டது.

மேற்கண்ட ஒப்பந்தப் புள்ளிகள் மூலமாக பொருட்கள் வாங்கியதற்கான செலவினங்கள் குறித்த பட்டியல்கள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்ட விவரங்கள் தொடர்பாக மனுதாரரால் கோரப்பட்ட விவரங்கள் அவருக்கு தகவலாக தெரிவிக்கப்பட்டன. ஆனால், அவர் கோரியிருந்தவாறு மேற்கண்ட சூரிய சக்தியில் இயங்கும் தெரு விளக்குகள், உயர் கோபுர சோலார் மின் விளக்குகள் மற்றும் கிருமி நாசினிகள் வாங்கியதற்கான Invoice நகல்கள் மனுதாரருக்கு விரைவில் அனுப்பப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதன் விவரங்கள், மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் 30.7.2020 நாளிட்ட செயல்முறையின் நகல், ஒப்பு நோக்குப் பட்டியல் ஆகியவற்றின் நகல்கள் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் எனது 3.1.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், திருப்பத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.**

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் பேரூராட்சியில் கடந்த 2020–2021ஆம் ஆண்டு சூரிய சக்தியுடன் இயங்கும் தெரு விளக்குகள் அமைத்ததில் பேரூராட்சி அலுவலர்களால் பெரும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளன எனவும் அதே போன்று கொரானா பெருந்தொற்று காலத்தின்போது திருப்பத்தூர் பேரூராட்சியால் கிருமிநாசினி வாங்கி பயன்படுத்தியதிலும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளன எனவும் திருப்பத்தூர் நகராட்சியிலிருந்து தனக்கு அளிக்கப்பட்ட தகவலில் சூரிய சக்தியுடன் இயங்கும் தெரு விளக்குகள் அமைப்பதற்கு ரூபாய் 67.14 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது என்றும் ஆனால் முறையான கணக்குகளை தனக்கு தெரிவிக்காமல் முன்னுக்கு பின் முரணாக தகவல் அளித்துள்ளனர் எனவும் அதே போன்று 3 உயர் மின் கோபுர விளக்குகள் ரூபாய் 19.80 இலட்சம் செலவு செய்து அமைத்துள்ளதாக தெரிவித்துள்ள பேரூராட்சியினர் அதற்கும் முறையாக கணக்கு காட்டவில்லை எனவும், மேலும் கொரானா காலத்தில் கிருமி நாசினி வாங்கியதற்காக ரூபாய் 5,66,888/– செலவு செய்ததிலும் முன்னுக்கு பின் முரணாக தனக்கு தகவல் அளித்துள்ளனர் என தெரிவித்துள்ளார். எனவே திருப்பத்தூர் பேரூராட்சியில் சூரிய ஒளியில் இயங்கும் தெருவிளக்குகளை அமைப்பதிலும், உயர் கோபுர மின் விளக்குகள் அமைப்பதிலும் மற்றும் கொரானா காலத்தில் கிருமி நாசினிகள் வாங்கியதில் முறைகேடுகள் ஆகியவற்றை விசாரித்து, சம்பந்தப்பட்ட பேரூராட்சி அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

திருப்பத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலம் மற்றும் அறிக்கையில் மனுதாரரின் மனுவில் தெரிவித்துள்ள சூரிய சக்தியில் இயங்கும் தெரு விளக்குகள் திருப்பத்தூர் பேரூராட்சியில் அமைப்பதற்கு அப்பணியை 3 விதமாக பிரிக்கப்பட்டு, அதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டன என்றும் மேலும் ரூபாய் 19,80,000/– மதிப்பீட்டில் 3 உயர் கோபுர சோலார் மின் விளக்குகள் அமைத்திட ஒப்பந்தப் புள்ளிகளின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு அதற்கான செலவின பட்டியல் தொகை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆணையின்படி விடுவிக்கப்பட்டது என்றும் மேற்கண்ட ஒப்பந்தப் புள்ளிகள் Tamil Nadu Transparency in Tenders Act, 2000-ன் குறிப்பிட்டுள்ளவாறு இவ்வொப்பந்தப் புள்ளிகள் தொடர்பாக தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்படவில்லை என்றும் மேலும் இணையதளம் மூலமாக E Tender-ம் கோரப்படவில்லை என்றும், உள்ளூர் ஒப்பந்ததாரர்களுக்கு தெரிவித்தும், உள்ளூரில் விளம்பரம் செய்தும் மேற்கண்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டன என்றும், மேலும் 2020–21 கொரானா பெருந்தொற்று காலத்தில் கிருமி நாசினி உரிய ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளின் கீழ் கொள்முதல் செய்யப்பட்டு அதற்கான செலவினப் பட்டியல் தொகை பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆணையின்படி விடுவிக்கப்பட்டது என்றும் மேற்கண்ட ஒப்பந்தப் புள்ளிகள் மூலமாக

பொருட்கள் வாங்கிதற்கான செலவினங்கள் குறித்த பட்டியல்கள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்கண்ட விவரங்கள் தொடர்பாக மனுதாரரால் கோரப்பட்ட விவரங்கள் அவருக்கு தகவலாக தெரிவிக்கப்பட்டன என்றும், மேலும் அவர் கோரியிருந்தவாறு மேற்கண்ட சூரிய சக்தியில் இயங்கும் தெரு விளக்குகள், உயர் கோபுர சோலார் மின் விளக்குகள் மற்றும் கிருமி நாசினிகள் வாங்கியதற்கான Invoice நகல்கள் மனுதாரருக்கு விரைவில் அனுப்பப்படும் என்று திருப்பத்தூர் பேரூராட்சியின் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

**விசாரணைக்குப்பின் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:-**

சிவங்கை மாவட்டம், திருப்பத்தூர் பேரூராட்சியில் சூரிய சக்தியில் இயங்கும் தெருவிளக்குகள் அமைத்திடவும் மூன்று உயர் கோபுர சோலார் மின் விளக்குகள் அமைத்திட சூரிய சக்தியுடன் இயங்கும் தெரு விளக்குகள் அமைப்பதற்கு ரூ.67.14 இலட்சம் செலவிடப்பட்டுள்ள ரூபாய் 25 இலட்சத்திற்கு மேல் ரூ.1 கோடி வரையிலான ஒப்பந்தப்புள்ளிகள் Tamil Nadu Transparency in Tenders Act 1998–ன்படி தினசரி நாளிதழில் (ஆங்கிலம் (ம) தமிழ்) விளம்பரம் செய்யப்பட வேண்டும். இந்நேர்வில் அவ்வாறாக விளம்பரம் செய்யாததை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. இது பேரூராட்சி பணியாளர்களின் அலட்சியப் போக்கு மற்றும் மெத்தனப்போக்கை காட்டுகிறது. விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை. அதேபோல் ரூ.19,80,000/- மதிப்பீட்டிலான 3 உயர் கோபுர சோலார் மின் விளக்குகள் அமைத்திட ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் கொள்முதல் செய்து அதற்கான செலவினப் பட்டியல் தொகை பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆணையின்படி விடுவிக்கப்பட்டும் இது தொடர்பான ஒப்பந்தபுள்ளி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்படவில்லை என்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது. மேலும் மனுதாரர் சூரிய சக்தியில் இயங்கும் தெரு விளக்குகள், உயர் கோபுர சோலார் மின் விளக்குகள் (ம) கிருமி நாசினிகள் வாங்கியதற்கான invoice நகல்கள் கோரியதற்கு விரைவில் அனுப்பப்படும் என தெரிவித்துள்ளதில் ஏதோ உள்நோக்கம் உள்ளது என தெரியவருகிறது.

மேலும் இணையதளம் மூலமாக E-Tenders கோரப்படாமல் உள்ளூர் ஒப்பந்ததாரர்களுக்கு தெரிவித்தும், உள்ளூரில் விளம்பரம் செய்தும், மேற்கண்ட ஒப்பந்தங்கள் பெறப்பட்டன என அறிய முடிகிறது. முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோராமல், பணிகளை மேற்கொண்டதற்கு பொறுப்பான சம்மந்தப்பட்ட அனைத்து செயல் அலுவலர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் இதைச் சரிவரக் கண்காணிக்கத் தவறிய சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்திடவும் பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும், திருப்பத்தூர் பேரூராட்சியால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான அனைத்து பட்டியல்களையும் (Bills) உள்ளாட்சி தணிக்கைத் துறை மூலம் ஆய்வு செய்து. அறிக்கையை சமர்ப்பிக்க உள்ளாட்சி நிதி தணிக்கை துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அவ்வறிக்கையின் அடிப்படையில் உரிய மேல் நடவடிக்கை தொடர பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

The Director of Local Fund Audit is directed to examine the tender papers dealing with the purchase and installation of solar lights and accessories and high – mast solar lights with their accessories and verify whether tender procedure has been pursued in accordance with the Tamil Nadu Tender Transperancy Act guidelines. A report may be sent to the Director of Town Panchyats and this Forum in the next 60 days positively.

2023–ஆம் ஆண்டு, ஜனவரி 23–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. மா. முத்துராஜா,
த/பெ.மாமுண்டி,
காளியம்மன் கோவில் தெரு,
திருப்பத்தூர் - 630 211,
சிவகங்கை மாவட்டம்.

2) செயல் அலுவலர்
திருப்பத்தூர் பேரூராட்சி,
திருப்பத்தூர் - 630 211, சிவகங்கை மாவட்டம்.

3) இயக்குநர்,
உள்ளாட்சி நிதி தணிக்கை துறை,
571, அண்ணாசாலை,
நந்தனம், சென்னை – 600 035.

4) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்ககம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

5) இணை இயக்குநர்(பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி. நகர்,
சென்னை–28 (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.